செ.வெ.எண்.488/2021 நாள்.29.10.2021

# திருப்பத்தூர் நகராட்சி சி.கே.சி திருமண மண்டபத்தில் அனைத்து வங்கிகளுடன் இணைந்து இந்தியன் வங்கி (முன்னோடி வங்கி) நடத்தும் மாபெரும் வாடிக்கையாளர் தொடர்பு முகாமில் 3200 பயனாளிகளுக்கு ரூ.99.03 கோடி கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

திருப்பத்தூர் நகராட்சி சி.கே.சி திருமண மண்டபத்தில் அனைத்து வங்கிகளுடன் இணைந்து இந்தியன் வங்கி (முன்னோடி வங்கி) நடத்தும் மாபெரும் வாடிக்கையாளர் தொடர்பு முகாமில் 3200 பயனாளிகளுக்கு ரூ.99.03 கோடி கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். அதனை தொடாந்து நிதி கல்வி மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து இந்தியன் வங்கி, நபார்டு வங்கி, கிராம வங்கி, கூட்டுறவு வங்கி, பாரத ஸ்டேட் வங்கி உள்ளிட்ட 26 வங்கிகள் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை பார்வையிட்டார்கள்.

இம்முகாமிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.தேவராஜி, திரு.ஏ.நல்லதம்பி, திரு.அ.செ.வில்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் நகராட்சி சி.கே.சி திருமண மண்டபத்தில் அனைத்து வங்கிகளுடன் இணைந்து இந்தியன் வங்கி (முன்னோடி வங்கி) நடத்தும் மாபெரும் வாடிக்கையாளர் தொடர்பு முகாமில் 3200 பயனாளிகளுக்கு ரூ.99.03 கோடி கடனுதவிகளை வழங்கியதில் மகிழ்ச்சியடைகிறேன்.

புதியதாக திருப்பத்தூர் மாவட்டம் உருவாக்கப்பட்டு 2 ஆண்டு காலமாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் கிராமப்புறங்களில் வாழுகின்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறு தொழில் செய்வதற்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. மேலும் தாட்கோ மூலமாக வீடு கட்டுவதற்கு கடன் வழங்கப்படுகிறது. நபார்டு வங்கியின் சார்பில் விவசாயிகளுக்கு வேளாண்மை மேம்பாடுகளுக்காக விவசாயிகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாவட்டத்தை முன்னேற்ற பாதையில் எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசு நலத்திட்டங்களை பொது மக்களுக்கு சென்று சேருவதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். எனவே பொது மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருப்பது வங்கிகள் நமது மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் அரசு சார்பில் வழங்கப்படும் அரசு திட்டங்கள் பொதுமக்களுக்கு எளிய வகையில் சென்றடைய வேண்டும்.

மேலும் ஒவ்வொரு காலாண்டிற்கும் இதேபோன்று அனைத்து வங்கிகளின் சார்பில் மாபெரும் வாடிக்கையாளர் தொடர்பு முகாம் நடைத்தப்பட வேண்டும். நமது மாவட்டத்தில் ஆம்பூர் சட்டமன்ற தொகுதியில் நாயக்கனேரி மலைகிராமம், ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியில் ஏலகிரி மலைகிராமம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் புதூர்நாடு மலைகிராமம் என 3 மாலை கிராமங்கள் உள்ளன. மலைப்பகுதிகளில் வாழுகின்ற மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் வங்கிக் கிளைகள், நடமாடும் வங்கி சேவைகளை அமைக்கப்பட வேண்டும்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் திங்கட்கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு அதிகமான மாணவர்கள் கல்வி கடன்கள் வழங்க மனுக்கள் வழங்குகிறார்கள். எனவே வருகின்ற வெள்ளிக்கிழமை கல்வி கடன் வழங்க சிறப்பு முகாம் நடத்தப்பட வேண்டும். இச்சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னபாகவே என்னென்ன ஆவணங்கள் எடுத்துகொண்டு வரவேண்டும் என்று பத்திரிக்கை செய்தி கொடுக்க வேண்டும். இச்சிறப்பு முகாம் நடைபெறும் நாளில் கல்விக்கடன் பெறவரும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பொது மக்கள் பயன்பெறும் வகையில் சிறு, குறு தொழிலாளர்களுக்காக தொழில்கடன் வழங்க ஒரு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாமில் மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.சூரியகுமார், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் திரு.இராஜேந்திரன், இந்தியன் வங்கி மண்டல மேலாளர் திரு.டி.கிருஷ்ணராஜ், பாரத ஸ்டேட் வங்கி முதன்மை மேலாளர் திரு.ம.மாமல்லன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.அருண்பாண்டியன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவர் திரு.அன்பழகன் அனைத்து வங்கியாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**